# MADITSSIA Bulletin

மடீட்சியா செய்தி இதழ்

Official Bulletin of
Madurai District Tiny & Small Scale Industries Association

Vol.12 Issue No.11
August - 2013
Reg. No. TN BIL/2001/4747




மடீட்சியா - AIMO விஸ்வேஸ்வரயா விருது 2012
முதல் பரிசு - அருள் இண்டஸ்டிரிஸ்,
திருநெல்வேலி



மடீட்சியா - AIMO விஸ்வேஸ்வரயா விருது 2012
இரண்டாம் பரிசு - அன்னை கேண்டில் இண்டஸ்டிரிஸ்,
வள்ளியூர்



மடீட்சியா - சக்தி மசாலா பெண்தொழில் முனைவோர்
விருது 2012
முதல்பரிசு - செல்சன் பிளாஸ்டிக்ஸ், திருநெல்வேலி



மடீட்சியா - சக்தி மசாலா பெண்தொழில் முனைவோர்
விருது 2012
இரண்டாம்பரிசு - T.M. இண்டர்நேஷனல், மதுரை



மடீட்சியா - டிவிஎஸ் சேவைத் தொழில் விருது 2012
முதல் பரிசு - அமர் சேவா சங்கம், ஆயக்குடி



தமிழக அரசின் சிறுதொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு. கே. தனவேல் இ.ஆ.ப. அவர்களுடன் மடீட்சியா சங்கப் பொறுப்பாளர்கள் மற்றும் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு. எஸ். மருதப்பன் அவர்கள்

# மடீட்சியாவின் 39-வது ஆண்டுவிழா மற்றும் விருது வழங்கும் விழா

•மடீட்சியாவின் 39-வது ஆண்டுவிழா மற்றும் மடீட்சியா-AIMO விஸ்வேஸ்வரயா விருது-2012, மடீட்சியா-சக்தி மசாலா பெண் தொழில் முனைவோர் விருது-2012, மடீட்சியா-டிவிஎஸ் சேவைத் தொழில் நிறுவனங்களுக்கான விருது-2012 வழங்கும் விழா 14.08.2013 அன்று மடீட்சியா அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மடீட்சியா தலைவர் திரு.வி.எஸ். மணிமாறன் அவர்கள் தலைமை வகித்து வரவேற்புரையாற்றினார்.

மடீட்சியாவின் கௌரவ செயலாளர் திரு.கே.எஸ். சேர்மபாண்டியன் அவர்கள் ஆண்டறிக்கையை வாசித்தார். மடீட்சியாவின் முன்னாள் தலைவர்கள், மடீட்சியா சிட்பி இண்டஸ்டிரியல் கிளினிக் ஆலோசகர்கள் பட்டியலை பொருளாளர் திரு. ஜி.ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் வாசித்தார். சிறப்பு விருந்தினர் டாக்டர்.பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் அனைவரையும் கௌரவித்தார். மடீட்சியாவின் கண்காட்சித்தலைவர்கள், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் சங்க அலுவலர்கள் பட்டியலை இணைச்செயலாளர் திரு.பி. முருகானந்தம் அவர்கள் வாசிக்க சிறப்பு விருந்தினரால் நினைவுப்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விழாவின் சிறப்பு விருந்தினர்களை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திரு.எம்.காமேஸ்மரன் அவர்கள் நினைவுப்பரிசு மற்றும் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார். மடீட்சியா-AIMO விஸ்வேஸ்வரயா விருது, மடீட்சியா-சக்தி மசாலா பெண் தொழில் முனைவோர் விருது, மடீட்சியா-டிவிஎஸ் சேவை தொழில் நிறுவனங்களுக்கான விருது பற்றிய விளக்கவுரையினை டாக்டர்.எம். ஜெகன்மோகன், முதல்வர் (பொறுப்பு) உசிலம்பட்டி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி அவர்கள் தொகுத்தளித்தார்.

விருது கமிட்டியின் நடுவர்கள் பட்டியலை துணைத்தலைவர் திரு.எல்.முராரி அவர்கள் வாசித்தார். சிறப்பு விருந்தினரால் விருது கமிட்டியின் நடுவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

விழாவின் சிறப்பு விருந்தினர் திரு.என்.ஆர். சுப்ரமணிய ராஜா, முன்னாள் தலைவர், AIMO சிறப்புரையாற்றினார். துணைத்தலைவர் திரு.கே.பி.முருகன் அவர்கள் சிறப்பு விருந்தினர் டாக்டர்.பி.கே.கிருஷ்ணராஜ வானவராயர் குறித்து அறிமுக உரையை நிகழ்த்தினார். மடீட்சியா-AIMO விஸ்வேஸ்வரயா விருது, மடீட்சியா-சக்தி மசாலா பெண் தொழில் முனைவோர் விருது, மடீட்சியா-டிவிஎஸ் சேவை தொழில் நிறுவனங்களுக்கான விருது பெற்ற வெற்றியாளர்களின் விபரங்களை டாக்டர்.எம்.ஜெகன்மோகன் தொகுத்தளித்தார்.

டாக்டர்.பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்கள் வெற்றி பெற்றவர்களுக்கு பின்வரும் விருதினை வழங்கி கௌரவித்தார்.

மடீட்சியா-AIMO விஸ்வேஸ்வரயா விருதிற்கான முதல் பரிசு — அருள் இண்டஸ்டிரிஸ், திருநெல்வேலி, மடீட்சியா-AIMO விஸ்வேஸ்வரயா விருது இரண்டாம் பரிசு — அன்னை கேன்டில் இண்டஸ்டிரிஸ், வள்ளியூர், மடீட்சியா-AIMO விஸ்வேஸ்வரயா விருது மூன்றாம் பரிசு — பார்கவி ரப்பர் பி. லிமிடெட், மதுரை.

மடீட்சியா-சக்தி மசாலா பெண் தொழில் முனைவோர் விருது முதல் பரிசு — செல்சன் பிளாஸ்டிக் இண்டஸ்டிரிஸ், திருநெல்வேலி, இிரண்டாம் பரிசு - டி.எம்.இண்டர்நேஷனல், மதுரை, மூன்றாம் பரிசு — விபீஸ் நேசுரல் பீ பார்ம், மதுரை.

மடீட்சியா-டிவிஎஸ் சேவை தொழில் நிறுவனங்களுக்கான விருது முதல் பரிசு — அமர் சேவா சங்கம், ஆயக்குடி, இரண்டாம் பரிசு —

